தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre Homebush Inc.
PO Box 4032, Homebush, NSW 2140.
www.tsch.org.au
homebushtsch@gmail.com

## பேச்சுப் போட்டி 2025 ஆண்டு 10

அனைவருக்கும் வணக்கம்

### தமிழ்ப் பண்பாடு

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் நாம். தமிழ்ப் பண்பாடு என்பது எம்முடையதே. எமது வாழ்வியல் முறையே தமிழ்ப் பண்பாடாகும்.

எமது அடையாளங்களான நாம் பேசும் மொழி, உண்ணும் உணவு, உடுத்தும் உடை, படைத்துள்ள இலக்கியங்கள், கொண்டுள்ள நம்பிக்கைகள், பின்பற்றும் பழக்கவழக்கங்கள், மரபுகள், கொண்டாடும் பண்டிகைகள், போற்றும் விழுமியங்கள் யாவும் எமது பண்பாட்டுக் கூறுகளாகும்.

தமிழ்ப் பண்பாட்டின் அரிய பல குறிக்கோள்களையும் கொள்கைகளையும் நம் பழந்தமிழ் இலக்கியங்களில் தெளிவாகக் காணலாம். பரந்த உலக மனப்பான்மை, பிறர்மீது அன்பு, ஈகை, நன்றி உணர்வு, மனத்தூய்மை, நல்லொழுக்கம், தமக்கென வாழாப் பிறர்க்குரியராய் வாழ்தல், என் கடன் பணிசெய்தல் என்ற கொள்கை, மானமென்றால் உயிரையும் கொடுத்தல், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிகரற்ற மனநிலை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற உயர்ந்த இலட்சியம், விடாது முயலுதல் என்பன தமிழர் பண்பாட்டின் அரிய முத்தான கொள்கைகளாகும்.

சங்ககாலத்துக்கு முற்பட்ட காலம் தொடங்கி ஓர் உலக மனப்பான்மை நம் மூதாதையரிடம் இருந்தது. அதனால்தான் புலவர் கணியன் பூங்குன்றனார்
"**யாதும் ஊரே யாவரும் கேளிர்**"என்று பாட முடிந்தது. இம் மனப்பான்மையிருந்து பிறந்தவையே கண்ணோட்டம், கருணை, இரக்கம் என்பன.

"**கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அ.்.தின்றேல்**
**புண்ணென்று உணரப் படும்**" என்றார் வள்ளுவர்.

தமிழைக் கற்ற மேனாட்டறிஞர் அனைவரும் நம் நீதிநூல்களையே முதலில் மொழிபெயர்த்துத் தமிழரின் வாழ்க்கை ஞானத்தைப் போற்றினர்.

"**அமிழ்தம் இவைவதாயினும் இனிதெனத்**
**தமியர் உண்டலும் இலரே**" என்கிறது புறநானூறு.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி வாழ்ந்தவர்கள் தமிழர்கள்.

நமது தமிழ்ப் பண்பாட்டின் மேன்மையை உணர்ந்து, புலம்பெயர் வாழ்விலும் அவற்றைப்பேணி உயர்வோம்.

நன்றி

வணக்கம்